



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”



FLY TOWARDS
DIGITAL INNOVATION

Services / சேவைகள்

✓ DIGITAL MARKETING
✓ WEB DEVELOPMENT
✓ SOFTWARE DEVELOPMENT

9080999823
7695883647

வடக்கு ரத வீதி, சங்கரன்கோவில்



Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 291 | 14.04.2026 | TUESDAY | CHITHIRAI: 1 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 291 | 14.04.2026 | செவ்வாய்கிழமை | சித்திரை : 1 | விலை : ரூ.5/-


## ஏப்.16, 17, 18ல்

# “காத்திருப்புக்கு முற்றுப்புள்ளி!”

## மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்து பிரதமர் மோடி விவரிப்பு



புதுடெல்லி: ஏப்.14-

கடந்த காலக் கனவுகளை நனவாக்கி, எதிர்கால லட்சியங்களை நிறைவேற்றும் என மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்து பிரதமர் மோடி தெரிவித்தார்.

இந்த வாரம் நாடாளுமன்றத்தில் 33 சதவீத மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்த விவாதம் நடைபெறவுள்ள நிலையில், இன்று புதுடெல்லியில் நடைபெற்ற பெண் சக்தி வணக்கம் (நாரி சக்தி வந்தன்) கருத்தரங்கில் உரையாற்றிய பிரதமர் மோடி, “நமது நாட்டின் நாடாளுமன்றம் ஒரு புதிய வரலாற்றைப் படைக்கும் தருவாயில் உள்ளது.

மகளிர் இடஒதுக்கீடு சட்டம் கடந்தகால கனவுகளை நனவாக்கும்; எதிர்கால லட்சியங்களை நிறைவேற்றும் ஒரு புதிய வரலாறாகும். சமத்துவமிக்க இந்தியாவுக்கான தீர்மானம் இது. இனி சமூக நீதி என்பது வெறும் முழக்கமாக மட்டும் இல்லாமல், நமது பணி கலாச்சாரம் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறையின் இயல்பான ஒரு பகுதியாகத் திகழும்.

2023 ஆம் ஆண்டில் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அனைத்துக் கட்சிகளாலும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. குறிப்பாக எதிர்க்கட்சிகள் தரப்பிலிருந்து, 2029 ஆம் ஆண்டுக்குள் இதை அமல்படுத்த வேண்டும் என்ற கூட்டு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மாநிலச் சட்டப்பேரவைகள் முதல் நாட்டின் நாடாளுமன்றம் வரை, பல தசாப்தங்களாக நீடித்த காத்திருப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நேரம் ஏப்ரல் 16, 17 மற்றும் 18 ஆகிய தேதிகளாகும். இந்தத் தேதிகளில்தான், சட்டத் திருத்தங்களைப் பரிசீலித்து நிறைவேற்றுவதற்காக நீட்டிக்கப்பட்ட பட்ஜெட் கூட்டத் தொடர் திட்டமிடப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டில், புதிய நாடாளுமன்றத்தில், ‘நாரி சக்தி வந்தன் சட்டம்‘ என்ற வடிவில் நாம் முதல் அடியை எடுத்து வைத்தோம். நமது தேசத்தின் வளர்ச்சிப் பயணத்தில் உள்ள இந்தக் குறிப்பிடத்தக்க மைல்கற்களுக்கு மத்தியில், 21 ஆம் நூற்றாண்டின் மிக முக்கியமான முடிவுகளில் ஒன்றை எடுக்கும் தருவாயில் இந்தியா இன்று நிற்கிறது.

இந்த முடிவு, நமது காலத்தின் மிக முக்கியமான முடிவுகளில் ஒன்றாகத் திகழும் என்பதை நான் மிகுந்த பொறுப்புணர்வுடன் கூறுகிறேன். இது பெண்களின் அதிகாரமளித்தலுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முடிவாகும். இது பெண்மையின் வலிமைக்கும் கண்ணியத்துக்கும் செலுத்தப்படும் ஓர் உண்மையான மரியாதையாகும்.

பெண்கள் இட ஒதுக்கீடு சட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் நிறைவேற்றப்படும்போது, மக்களவை இடங்களின் எண்ணிக்கை 816 ஆக உயருவது உறுதி செய்யப்படும். இதில் 273 இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்” என்றார்.

காங்கிரஸ் சொல்வது என்ன?

முன்னதாக, பிரதமர் நரேந்திர மோடிக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே எழுதியுள்ள கடிதத்தில், ‘மகளிர் இடஒதுக்கீடு சட்டம் 2023ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. உடனடியாக சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று அப்போதே வலியுறுத்தினேன். சட்டம் நிறைவேற்றப்பட்டு 30 மாதங்களுக்குப் பிறகு திடீரென நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் கூட்டப்படுகிறது. ஆனால் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்து எதிர்க்கட்சிகளுடன் எவ்வித ஆலோசனையும் நடத்தப்படவில்லை.

தற்போது நீங்கள் எழுதியிருக்கும் கடிதத்தில் தொகுதி மறுவரையறை குறித்து எந்த தகவலும் இடம்பெறவில்லை. இந்தச் சூழலில் வரலாற்று சிறப்புமிக்க மகளிர் இடஒதுக்கீடு சட்டம் குறித்து ஆக்கப்பூர்வமான விவாதத்தை நடத்துவது சாத்தியமில்லை. தற்போது பல்வேறு மாநிலங்களில் தேர்தல் நடத்தப்படுகிறது.

இந்த தேர்தல்கள் முடிந்த பிறகு ஏப்ரல் 29ம் தேதி அனைத்துக் கட்சி கூட்டத்தை நடத்த வேண்டும். அதில் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் தொடர்பான அரசியலமைப்பு சட்ட திருத்தங்கள் குறித்து விவாதிக்க வேண்டும். மகளிருக்கான இடஒதுக்கீட்டை அதிகரிக்க திடீரென நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தை கூட்டியிருப்பது அரசியல் ஆதாயம் தேடும் முயற்சி ஆகும்’ என்று கார்கே தெரிவித்துள்ளது கவனிக்கத்தக்கது.

## “தமிழகத்தின் தொழில்துறை வளர்ச்சிக்கு மத்திய அரசே காரணம்” : அண்ணாமலை



சென்னை: ஏப்.14-

தமிழகத்தின் தொழில்துறை வளர்ச்சிக்கு மத்திய அரசுதான் காரணம். இதனை அமைச்சர் டிஆர்பி ராஜாவால் மறுக்க முடியுமா?. திமுக அமைச்சர்கள் வாய் உள்ளதால் பிழைத்துக் கொள்கிறார்கள்,” என தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “மதுரையில் தற்போது இரண்டு அமைச்சர்கள் இருக்கிறார்கள். அமைச்சர்கள் மூர்த்தியும், பிடிஆர் தியாகராஜனும் மக்கள் மத்தியில் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். மதுரை மெட்ரோ ரயில் திட்டம் குறித்து இருவரும் பொய்ப் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

மதுரை மற்றும் கோவைக்கு மெட்ரோ ரயில் திட்டம் தேவை என்பது மக்களின் விருப்பம். இவை இரண்டும் மிகப்பெரிய தொழில் வளர்ச்சி மற்றும் அதிக மக்கள் தொகை வளர்ச்சி இருக்கக் கூடிய நகரங்கள். ஆனால் மாநில அரசு தவறான அறிக்கையை அனுப்பியிருக்கிறது. மத்திய அரசு அனுப்பிய பதில் கடிதத்தையும் தமிழக அரசு மக்கள் மத்தியில் காட்ட வேண்டும்.

அமைச்சர் பிடிஆர், எங்கள் கூட்டணி வேட்பாளர் சுந்தர்.சியை பார்த்து ‘வெளியூர் ஆள்’ எனக் குறிப்பிடுகிறார். இவருமே அமெரிக்காவில் தான் படித்தார். அங்கேயே தான் சுற்றித்திரிந்தார். இப்போது மாற்றி மாற்றி பேசி வருகிறார். உள்ளூர் சந்தையிலேயே விலை போகாது திராவிட மாடல் அரசு, இதை வெளியூர் சந்தையில் யாரை வாங்கப் போகிறார்கள்.

தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்கு மத்திய அரசுதான் காரணம். இதனை அமைச்சர் டிஆர்பி ராஜாவை இல்லை என்று சொல்லச் சொல்லுங்கள் பார்ப்போம். திமுக அமைச்சர்கள் வாய் உள்ளதால் பிழைத்துக் கொள்கிறார்கள். திமுகவுக்கு எதிரான வாக்கும், நமக்கான வாக்கும் நமக்கு வேண்டும்.

தமிழகத்தில் தேர்தல் களம் இருமுனைப் போட்டியாக மாறிக்கொண்டிருக்கிறது; திமுக தொண்டர்கள் கடுமையாக களத்தில் வேலை செய்து வருகிறார்கள். ஆனாலும், ஆட்சிக்கு எதிரான அலை மிகப்பெரிய அலையாக இருக்கிறது.

அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணியினர் மிகக்கடுமையாக பணி செய்து கொண்டிருக்கிறார்கள். பெரிய அலை இப்போதுதான் உருவாக ஆரம்பித்துள்ளது. இமாலய வெற்றியை நோக்கி என்டிஏ நகர்ந்து கொண்டிருக்கிறது. முதல்வருக்கு ஐபிஎல் பார்ப்பது தான் வேலையா? தமிழகத்தில் எத்தனை வேலை நடந்து கொண்டிருக்கிறது.

பரந்தாமன், பரகலா பிரபாகர் உள்ளிட்டோர் அடிப்படையில் யார்?... வேலை இல்லாதவர்கள். வேங்கை வயல் சென்று பரந்தாமனோ, பரகலா பிரபாகரோ பார்த்தார்களா?; மாநில அரசைப் பற்றி பேசினார்களா?.

மாணிக்கம் தாகூர் எம்.பி, வேறு வேலை இல்லாமல் என்னை சீண்டிக் கொண்டு இருக்கிறார். முத்துராமலிங்க தேவர் மிகப்பெரிய மேதை. நாங்கள் அனைவரும் அவரை கடவுளாகப் பார்க்கிறோம்.

தவெக தலைவர் விஜய்யின் பிரச்சாரக் கூட்டத்துக்கு அரசும் அனுமதி தர வேண்டும். காவல்துறையும் கூட்டத்தை கட்டுப்படுத்த வேண்டும். அதே நேரத்தில் விஜய்யும் பாதுகாப்புடன் இருக்க வேண்டியது முக்கியம்.

‘ஜனநாயகன்’ திரைப்படம் என்பது நிறைய பேரின் உழைப்பு, வியர்வை, ரத்தம். தற்போது அது லீக் ஆகிவிட்டது. இந்த நேரத்தில் இப்படி நடந்திருக்கக் கூடாது. இது தவறு. எங்கிருந்து லீக் ஆனது என்பதை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தயாரிப்பு நிறுவனத்திற்கு நம்பிக்கை இருந்தால் சிபிஐ நோக்கிகூட போகட்டும். மிக நிச்சயமாக குற்றவாளிகள் தண்டிக்கப்பட்ட வேண்டும். அதேமசயம் உழைப்பாளிகளுக்கு அங்கீகாரம் கொடுக்கப்பட வேண்டும். அனைவரும் திரையரங்கில் படத்தைப் பாருங்கள்” இவ்வாறு அவர் பேசினார்.

## அமைச்சர் சேகர் பாபுவின் மகன்களுக்கு சொந்தமான நிறுவனத்தில் வருமான வரித்துறை சோதனை



சென்னை: ஏப்.14-

அமைச்சர் சேகர் பாபுவின் மகன்களுக்கு சொந்தமான நிறுவனத்தில் வருமான வரித்துறையினர் திடீர் சோதனை நடத்தி வருகின்றனர்.

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் களம் சூடு பிடித்து வருகிறது. இதனிடையே, அமைச்சர் சேகர் பாபுவின் மகன்கள் ஜெயசிம்மன், விக்னேஷ் ஆகியோர் நடத்தி வரும் நிறுவனத்தில் திடீரென வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகிறார்கள்.

சென்னை மயிலாப்பூரில் உள்ள சாலை கட்டுமான டெண்டர் நிறுவனத்தில் அதிகாரிகள் இச்சோதனையை நடத்தி வருகிறார்கள். அதோடு, மத்திய பாதுகாப்பு படையினர் துணையுடன் தேர்தல் பறக்கும் படையினரும் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

பணப்பட்டுவாடா தொடர்பான புகாரின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது. சென்னையில் காலை முதலே மயிலாப்பூர், வடபழனி, கீழ்பாக்கம், அடையாறு உள்ளிட்ட 5 இடங்களில் வருமான வரித்துறையினர் தீடீர் சோதனை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

சோதனை முடிந்த பிறகுதான் கைப்பட்டப்பற்ற ஆவணங்கள் குறித்து தகவல் தெரியவரும் என கூறப்படுகிறது.

## “வள்ளியூரில் அழகுமுத்துக்கோன் வெண்கலச் சிலை! மு.அப்பாவு அதிரடி! வாக்குறுதியால் நிலைகுலையும் எதிர்க்கட்சிகள்!



ராதாபுரம், ஏப்.14

ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் சபாநாயகர் மு. அப்பாவு, தனது 6ஆம் நாள் தேர்தல் பிரச்சாரத்தைச் சௌந்தரபாண்டியபுரத்தில் இருந்து தொடங்கி, பல்வேறு கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

முக்கிய அறிவிப்புகள் மற்றும் சாதனைகள்:

வள்ளியூர் பழைய பேருந்து நிலையம் அருகே யாதவ சமுதாய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, சுதந்திரப் போராட்ட வீரர் அழகுமுத்துக்கோன் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க இடம் வாங்கப்பட்டு பத்திரம் பதியப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதற்காக யாதவ சமுதாயத்தினர் அவருக்கு நேரில் நன்றி தெரிவித்தனர்.

ஆன்மீக சுற்றுலா மேம்பாடு: தெற்கு கள்ளிகுளம் அதிசய பனிமாதா ஆலயத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்காக ரூ. 3.50 கோடியில் தங்கும் விடுதிகள் மற்றும் கோயில் புதுப்பிப்புப் பணிகளுக்காக ரூ. 2.25 கோடி என மொத்தம் ரூ. 5.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டினார்.

கல்வி மற்றும் சுகாதாரம்: தொகுதியின் அனைத்துப் பள்ளிகளுக்கும் ஸ்மார்ட் கிளாஸ் வசதி, உதயத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ. 1.20 கோடியில் புதிய கட்டிடம் எனத் தொகுதி முழுவதும் செயல்படுத்தப்பட்ட வளர்ச்சிப் பணிகளைப் பட்டியலிட்டார்.

தெற்கு கள்ளிகுளம், சிங்காரத்தோப்பு, சமூகரெங்கபுரம், கோட்டைகருங்குளம் உள்ளிட்ட பகுதிகளுக்குச் சென்ற வேட்பாளருக்குப் பொதுமக்கள் பட்டாசு வெடித்தும், மலர் தூவியும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

கூட்டணி கட்சிகள் பங்கேற்பு:

நெல்லை கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் கிரகாம்பெல், ராதாபுரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளரும் மாவட்ட பஞ்சாயத்து தலைவருமான வி.எஸ். ஆர்.ஜெகதீஷ், ராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, சமூகை முரளி, தேமுதிக மாவட்ட செயலாளர் விஜிவேலாயுதம், ராதாபுரம் ஒன்றிய செயலாளர் துரைப்பாண்டி, இசக்கிமுத்து, மாவட்ட தொழில்நுட்ப அணி செயலாளர் அபினேஷ், மதிமுக மாவட்ட செயலாளர் ரைமண்ட், விடுதலை சிறுத்தை கட்சிகள் மாவட்ட செயலாளர் அருள்செல்வன், மக்கள் நீதி மைய மாவட்ட செயலாளர் மைக்கேல் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பெருந்திரளாகக் கலந்துகொண்டனர்.

சக்கர வியூகம்:

அழகுமுத்துக்கோன் சிலை அறிவிப்பு என்பது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் உணர்வுப்பூர்வமான கோரிக்கை. தேர்தல் நேரத்தில் இந்த அறிவிப்பு வெளியானது மற்ற வேட்பாளர்களுக்கு மிகப்பெரிய நெருக்கடியைக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கண்ணீர் புகை குண்டு முதல் முதலுதவி வரை; கண்ணியமாக நடக்கக் காவலர்களுக்கு அபிஷேக் தீட்சித் அறிவுறுத்தல்!

மதுரை, ஏப்.14

தமிழக சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில், மதுரை மாநகரில் சட்ட ஒழுங்கைப் பாதுகாக்கவும், அசம்பாவிதங்களைத் தவிர்க்கவும் மதுரை மாநகர போலீஸ் கமிஷனர் திரு. அபிஷேக் தீட்சித் உத்தரவின் பேரில், பிரம்மாண்ட கலவர தடுப்பு ஒத்திகை நடைபெற்றது.




மாநகர ஆயுதப்படை துணை கமிஷனர் திருமலை குமார் தலைமையில் நடைபெற்ற இந்த ஒத்திகையில், தேர்தல் நேரத்தில் ஏற்படும் வன்முறைகள் மற்றும் வாக்குச்சாவடி கைப்பற்றுதல் போன்ற சம்பவங்களை எப்படிக் கையாள்வது என்பது குறித்துச் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. போலீசார் ஒருபுறம் கலவரக்காரர்கள் வேடமிட்டும், மறுபுறம் பாதுகாப்புப் படை வீரர்கள் போன்றும் பிரிந்து, கல்வீச்சுச் சம்பவங்களை எதிர்கொள்ளுதல், கூட்டத்தைக் கலைக்கக் கண்ணீர் புகைக் குண்டுகளைப் பயன்படுத்துதல் போன்ற பயிற்சிகளை நிஜக் கலவரம் போன்றே செய்து காண்பித்தனர். முதலுதவி மற்றும் மீட்பு: கலவரத்தில் காயமடைந்தவர்களை உடனடியாக மீட்டு, முதலுதவி சிகிச்சை அளித்து ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கும் அவசர கால நடவடிக்கைகளும் ஒத்திகைப் பார்க்கப்பட்டன.

தேர்தல் பணியின் போது பொதுமக்கள், குறிப்பாக முதியவர்களிடம் மிகுந்த பொறுமையுடனும், கண்ணியத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் எனப் போலீசாருக்கு அறிவுறுத்தப்பட்டது. பணியின் போது செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை குறித்த விழிப்புணர்வும் வழங்கப்பட்டது.

# *விளாத்திகுளம்**”எகிறும் இலை.. மறைகிறது சூரியன்! இரண்டாம் கட்டத் தேர்தல் களம் ஆளுங்கட்சிக்கு மிகப்பெரிய சவாலா?

விளாத்திகுளம் ஏப்.14-

தூத்துக்குடி மாவட்டத்தின் முக்கியத் தொகுதியான விளாத்திகுளத்தில், இரண்டாம் கட்டத் தேர்தல் களம் ஆளுங்கட்சிக்கு மிகப்பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது.

*எம்.எல்.ஏ மார்க்கண்டேயன் மீதான புகார்கள்:*

தற்போதைய எம்.எல்.ஏ மார்க்கண்டேயன் மீது காற்றாலை முறைகேடுகள் மற்றும் மணல் குவாரி கொள்ளை போன்ற அதிரடிப் புகார்கள் பட்டிதொட்டியெங்கும் பரவியுள்ளன. குறிப்பாக, கிராமப்புறப் பெண்கள் மத்தியில் இது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர் வாக்கு சேகரிக்கச் செல்லும் இடங்களில் காட்டும் "மிரட்டும் தொனி" பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களிடையே பெரும் அதிருப்தியை உண்டாக்கியுள்ளது.



*இரட்டை இலையின் எழுச்சி:*

அதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சத்யா தொகுதிக்குப் புதிய அறிமுகமாக இருந்தாலும், கட்சியின் வலுவான ஆதரவு மற்றும் ஆளுங்கட்சி மீதான அதிருப்தியால் இரட்டை இலை சின்னம் தற்போது கிராமங்களில் "எகிறிக் குதித்து" முன்னிலை பெற்று வருகிறது. எந்தவொரு தேர்தல் களத்திலும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் வாக்காளர்களுக்கும் இடையே பாலமாகச் செயல்படுபவர்கள் செய்தியாளர்கள். ஆனால், ஊடகங்களுக்குத் தேவையான செய்திகளையோ அல்லது தங்களின் தேர்தல் பயணத் திட்டங்களையோ முறையாகப் பகிர்வதில்லை என்ற குற்றச்சாட்டு வலுத்துள்ளது.

இது குறித்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அவர்களின் கவனத்திற்குத் தற்போதைய கள நிலவரங்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

# கிழக்கு கடற்கரை பகுதியில் ஏப்.15 முதல் ஜூன் 14 வரை மீன்பிடி தடை

சென்னை, ஏப்.14-

கிழக்கு கடற்கரை பகுதியில் ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரை மீன்பிடி தடை அமலில் இருக்கும் என சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்

இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983 ன் கீழ் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 தேதி முதல் ஜீன் 14 வரை மீன்பிடி தடைக் காலம் 61 நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த மீன்பிடி தடைக் காலத்தில் தமிழக கடலோர பகுதிகளிலுள்ள மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் இழுவலைப் படகுகள் மீன்பிடி துறைமுகம் / தங்குதளத்திலிருந்து கடலில் மீன்பிடிக்க செல்ல வேண்டாம்.



அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்தில் மீன்பிடி தடைக் காலத்தில் இயந்திரம் பொருத்தப்பட்ட அனைத்து வகை மீன்பிடி கலன்கள் கடலில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், சென்னை மாவட்டத்திலுள்ள இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் ஆந்திர மாநில கடல்பகுதிக்கு கண்டிப்பாக செல்லக் கூடாது என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கிழக்கு கடற்கரை மீன்பிடி தடைகாலம் அமலுக்கு முன்னர் 14.04.2026 இரவு 12 மணிக்குள் கடலுக்கு சென்ற மீன்பிடி விசைப்படகுகள் அனைத்தும் கட்டாயம் கரைக்கு திரும்பிட வேண்டும் 14.04.2026 இரவு 12 மணிக்கு பிறகும் கரை திரும்பும் மீன்பிடி விசைப்படகுகள் மீது தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983 ன்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை சென்னை மாவட்ட மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களுக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அமெரிக்கா ஈரான் அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வி எதிரொலி

## இந்திய பங்குச் சந்தை வீழ்ச்சி

மும்பை, ஏப்.14-

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்த நிலையில் மேற்காசியாவில் போர் பதற்றம் மீண்டும் அதிகரித்துள்ளது. இந்நிலையில், இந்திய பங்குச் சந்தைகளில் இன்று வர்த்தகம் சரிவடைந்தது.

கடந்த வாரம் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து சனிக்கிழமை அன்று பாகிஸ்தானில் இருதரப்புக்கு இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இது தோல்வியடைந்த நிலையில் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை சுமார் 8 சதவீதம் என அதிகரித்துள்ளதாக தகவல். மீண்டும் போர் பதற்றம் ஏற்பட்டுள்ள காரணத்தால் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வாரத்தின் முதல் வர்த்தக தினமான இன்று (ஏப்.13, திங்கள் கிழமை) காலை இந்திய பங்குச் சந்தைகள் சரிவுடன் தொடங்கியது. அதன்படி, மும்பை பங்குச் சந்தை குறியீட்டெண் சென் செக்ஸ் சுமார் 1,414 புள்ளிகள் வீழ்ச்சியடைந்து 76,135 என்ற நிலையில் உள்ளது. மும்பை பங்குச் சந்தையின் முந்தைய வர்த்தக நாளில் 77,550.25 என சென்செக்ஸ் நிறைவடைந்தது குறிப்பிடத்தக்கது.

இதே போல தேசிய பங்குச் சந்தை நிஃப்டி, சுமார் 407 புள்ளிகள் சரிவடைந்து 23,643 என்ற நிலையை எட்டியது. நிஃப்டியும் முந்தைய வர்த்தக நாளில் 24,050.60 புள்ளிகளுடன் நிறைவடைந்தது. இந்த நிலையில் இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் சென்செக்ஸ் மற்றும் நிஃப்டி சரிவடைந்தது.

இதனால் டாடா ஸ்டீல், கோல் இந்தியா, என்டிபிசி, ஓஎன்ஜிசி, உள்ளிட்ட நிறுவன பங்குகளின் விலை வீழ்ச்சி அடைந்தது. சர்வதேச அளவில் நிலவும் அசாதாரண சூழல் காரணமாக இந்திய பங்குச் சந்தைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக வணிக துறை சார்ந்த வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்

# ஆசிரியர்களுக்கு தேர்தல் பணி பயிற்சி: திருச்சியில் பள்ளிகளுக்கு விடுமுறை

சென்னை. ஏப்.14-

ஆசிரியர்களுக்கான தேர்தல் பணி பயிற்சி வகுப்புகள் காரணமாக, திருச்சியில் நாளை அனைத்து வகையான பள்ளிகளுக்கும் விடுமுறை அளித்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணப் பிரியா அறிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில்: ”திருச்சி மாவட்டத்தில் நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலுக்கான 2ம் கட்ட பயிற்சி வகுப்பு நாளை (ஏப்.15) சட்டப்பேரவை தொகுதிகள் வாரியாக நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் கலந்து கொள்ள பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் செல்லவிருப்பதால் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்குமாறு திருச்சி மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சித் தலைவருமான வே. சரவணன் அறிவுறுத்தியுள்ளார்.

எனவே, திருச்சி வருவாய் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை பள்ளிகளுக்கும் நாளை விடுமுறை அறிவிக்கப்படுகிறது.

மேலும், ஆசிரியர்கள் தேர்தல் பணிக்கு செல்வதால் மைய மதிப்பீட்டு பணிகளுக்கும் நாளை முகாம் விடுமுறை என அறிவிக்க சார்ந்த முகாம் அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. தேர்தல் பணி ஆணை பெற்ற அனைத்து ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் உரிய நேரத்தில் தேர்தல் பயிற்சியில் கலந்து கொள்ள அறிவுறுத்துமாறு தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.” என்று கிருஷ்ணப் பரியா கூறியுள்ளார்.





■ மதுரை மாவட்டம் சோழவந்தான் கீழ்நாச்சிகுளம் பகுதியில், ஏ.ஆர்.இ என்னும் தன்னார்வ தொண்டு நிறுவனம் 2015ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதில் விவசாயிகளுக்கு விவாசயம் சார்ந்த தொழில்நுட்ப பயிற்சி, ஏழை எளிய மக்களுக்கு மருத்துவம் சார்ந்த உதவிகளை செய்து வருகிறது. அதோடு மகளிர் சுயஉதவிகுழு பெண்கள் மற்றும் வீட்டில் தொழில் தொடங்க ஆர்வம் கொண்ட பெண்களுக்கு 1 மாதம் தையல் பயிற்சி நடத்தப்பட்டது. இதில் ஏ.ஆர்.இ தொண்டு நிறுவன இயக்குநர் கர்ணன் சிறப்பு விருந்தினர்கள் அனைவரையும் வரவேற்றார். இதில் சிறப்பு விருந்தினராக ஜெகநாதன், செம்பட்டியில் இருந்து வருகை தந்து தையல் பயிற்சி முடித்த பெண்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் ஆர்டர் வேலைகள் சம்மந்தமான விசயங்களை எடுத்துரைத்தார். தான் பவுண்டேசன் ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீநிதி அவர்கள் 1 மாதம் தையல் பயிற்சி முடித்த பெண்களுக்கு சுயதொழில் சம்பந்தமான ஆலோசனை வழங்கி, பெண்கள் குழுவாக இருந்து சாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும் பயிற்சி முடித்த 25க்கும் மேற்பட்டோர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. முடிவில் வாசுகி தையல் பயிற்சியாளர் அனைவருக்கும் நன்றி உரை கூறினார்.

# ஆற்காடு அருகே ஐஸ்கிரீம் கடையில் தீ விபத்து: வடமாநில தம்பதி உயிரிழப்பு

ஆற்காடு,ஏப்.14-

ஆற்காடு அருகே பிரபல ஐஸ்கிரீம் தயாரிக்கும் கடையில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி வட மாநில தம்பதி உயிரிழந்தனர்.

ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்தவர் பேருலால் (50). இவரது மனைவி சுந்தர் தேவி (42). இவர்களுக்கு இரு மகன்கள் உள்ளனர். பேருலால் கடந்த 10 ஆண்டுகளாக ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அருகே உள்ள தேவி நகரில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். அதே பகுதியில் வாடகை கட்டிடத்தில் ஐஸ்கிரீம் தயாரிப்பு கடை நடத்தினார். இங்கு தயாரிக்கப்படும் ஐஸ்கிரீம்கள் சுற்று வட்டார பகுதிகளுக்கு சில்லறை மற்றும் மொத்த விற்பனை செய்து வந்தார் பேருலால்.



இந்நிலையில், கணவன் மனைவி இருவரும் இன்று (ஏப்.13ம் தேதி) அதிகாலை கடையில் ஐஸ்கிரீம் தயாரிக்க பால் காய்ச்சும் பணியில் ஈடுபட்டனர். அப்போது, எதிர்பாராத விதமாக கடையில் திடீரென பயங்கர சத்தத்துடன் வெடிப்பு ஏற்பட்டு, கடை தீ பிடித்து எரிய தொடங்கியுள்ளது. அடுத்த சில நிமிடங்களில் கடை முழுவதும் தீ மளமளவென பரவியது.

கடையின் ஷட்டர் உட்புறமாக மூடப்பட்டு இருந்ததால் கணவன் மனைவி இருவரும் கடையில் இருந்து உடனடியாக வெளியேற முடியால் அங்கேயே சிக்கிக்கொண்டனர். மேலும் விபத்து குறித்து தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த ஆற்காடு தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். கடையின் ஷட்டரை உடைத்து உள்ளே சென்ற வீரர்கள், தீ விபத்தில் சிக்கிக் கொண்ட இருவரையும் மீட்டு சிகிச்சைக்காக ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

உடலில் 60 சதவீதத்துக்கும் மேல் தீக்காயம் ஏற்பட்ட கணவன் மனைவிக்கு முதலுதவி அளித்து மருத்துவர்கள் பரிந்துரையின்படி மேல் சிகிச்சைக்காக வேலூர், அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு இருவரையும் பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவர்கள் இருவரும் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து ஆற்காடு நகர போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். முழுமையான விசாரணைக்கு பிறகே தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் தெரியவரும் என தீயணைப்பு துறையினர் தெரிவித்தனர்.

# “எடப்பாடியின் ஆட்சியும் வராது.. அவர் சொன்ன பிரிட்ஜூம் வராது! கடையநல்லூரில் கனிமொழி எம்.பி. அதிரடிப் பேச்சு

கடையநல்லூர் ஏப். 14-

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் திமுக கூட்டணி சார்பில் போட்டியிடும் மதிமுக வேட்பாளர் தி.மு. இராசேந்திரனை ஆதரித்து, திமுக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், ஒன்றரை கோடி பெண்களுக்கு வழங்கிய மகளிர் உரிமைத் தொகை, கல்லூரி மாணவர்களுக்கான தமிழ் புதல்வன், புதுமைப்பெண் திட்டங்கள் மற்றும் 'நான் முதல்வன்' திட்டத்தின் சாதனைகளைச் சுட்டிக்காட்டினார்.



அரசியல் விமர்சனம்: "பாஜக மக்களைப் பிரித்தாழுகிறது, அவர்களுடன் எடப்பாடி பழனிசாமி ரகசியக் கூட்டணி வைத்துள்ளார். இஸ்லாமியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் எதிராகச் சதி செய்யும் சக்திகளுடன் எடப்பாடி கைகோர்த்துள்ளார்" எனச் சாடினார்.

*கடையநல்லூர் வாக்குறுதி:* இப்பகுதி மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான அரசு மகளிர் கல்லூரி, திமுக ஆட்சி அமைந்த ஒரு மாத காலத்திற்குள் நிறைவேற்றப்படும் என உறுதி அளித்தார்.

எதிரணி மீதான தாக்குதல்: "எடப்பாடியின் ஆட்சியும் வராது, அவர் ஏமாற்று வேலைக்காகக் கொடுத்த பிரிட்ஜ் வாக்குறுதியும் வராது. கலைஞர் வழியில் சொன்னதைச் செய்து முடிப்பவர் நமது முதல்வர் ஸ்டாலின்" என முழங்கினார்.

கூட்டத்தில் திமுக மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் செல்லத்துரை. ராணி ஸ்ரீகுமார் எம்.பி மாவட்ட அவைத் தலை வர் மாவட்ட சுந்தரமகாலிங்கம், மாவட்ட துணை செயலாளர்கள் கனிமொழி, கென்னடி, மாவட்ட பொருளாளர் ஷெரிப் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆறுமுகச்சாமி, முத்துப்பாண்டி, ஷேக்தாவூது, பொதுக்குழு உறுப்பினர்கள் சாமித்துரை, செங்கோட்டை ரஹீம், தமிழ்செல்வி, ஒன்றிய செயலாளர் சுரேஷ், ரவிசங்கர். சொக்கம்பட்டி மணிகண்டன், நகர செயலாளர்கள் வக்கீல் வெங்கடேசன் பீரப்பா, அப்பாஸ், நகர் மன்ற தலைவர் மூப்பன்ஹபீபுர் ரஹ்மான், யூனியன் சேர்மன் ஷேக் அப்துல்லா. துணைத்தலைவர் ஐவேந்திரன் தினேஷ், முத்துக்குமார், முன்னாள் நகர செயலாளர் சேகனா, பெருமாள் துரை. யாத்ரா பழனி, கரடிகுளம் காளிராஜ் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

# எட்டயபுரம் அருகே லாரி மீது கார் மோதி விபத்து: சென்னையைச் சேர்ந்த 4 பேர் உயிரிழப்பு



கோவில்பட்டி, ஏப்.14-

எட்டயபுரம் அருகே தேசிய நெடுஞ்சாலையில் லாரி மீது கார் மோதிய விபத்தில் சென்னையைச் சேர்ந்த தம்பதி உட்பட 4 பேர் உயிரிழந்தனர்.

சென்னை கொளத்தூர் வெற்றி நகரைச் சேர்ந்தவர் பாஸ்கரன் (45). இவர் தனது மனைவி வனிதா (37), மகள் சந்தியா (15), பிரதீப் குமார் (13), உறவினர் வசந்தி (40) ஆகியோர் திருச்செந்தூருக்கு காரில் கடந்த 11ம் தேதி புறப்பட்டனர். காரை அதே பகுதியைச் சேர்ந்த பழனி (45) என்பவர் ஓட்டினார். இன்று காலை திருச்செந்தூரில் சுவாமி தரிசனத்தை முடித்துவிட்டு ஊருக்கு புறப்பட்டனர்.

தூத்துக்குடி மதுரை தேசிய நெடுஞ்சாலையில் இன்று பிற்பகல் 2.30 மணியளவில் எட்டயபுரத்தை கடந்து கோட்டூர் விலக்கு பகுதியில் சென்றபோது, சாலையோரம் நின்ற லாரியின் பின்புறத்தில் எதிர்பாராதவிதமாக கார் மோதியது. இதில், பாஸ்கரன், அவரது மனைவி வனிதா, உறவினர் வசந்தி, ஓட்டுநர் பழனி ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

தகவல் அறிந்து அங்கு வந்த எட்டயபுரம் போலீஸார் விபத்தில் காயமடைந்த சந்தியா, பிரதீப் குமார் ஆகியோரை மீட்டு சிகிச்சைக்காக எட்டயபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்கு முதலுதவி அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தொடர்ந்து, இடிபாடுகளில் சிக்கியிருந்த 4 பேரின் சடலங்களை மீட்டு பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தகவல் அறிந்து கோவில்பட்டி வட்டார போக்குவரத்து அலுவலர் கிரிஜா, விளாத்திகுளம் டி.எஸ்.பி. சுந்தரபாண்டியன் உள்ளிட்டோர் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினர்.

இது தொடர்பாக எட்டயபுரம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, லாரி ஓட்டுநர் தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே முத்துகிருஷ்ணபேரியைச் சேர்ந்த சுப்பிரமணியனிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சட்டப்பேரவை தேர்தல்: டாஸ்மாக் கடைகளுக்கு 4 நாட்கள் விடுமுறை




சென்னை, ஏப்.14-

சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி ஏப்ரல் 21, 22, 23ம் தேதிகள் மற்றும் வாக்கு எண்ணிக்கை நாளான மே 4ம் தேதி ஆகிய நான்கு நாட்களுக்கு டாஸ்மாக் கடைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு ஏப்ரல் 23ம் தேதி நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெறுகிறது. இந்தச் சூழலில், தேர்தலையொட்டி 4 நாட்களுக்கு டாஸ்மாக் கடைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்ட அறிவிப்பில், வாக்குப்பதிவு நாளான ஏப்ரல் 23 மற்றும் அதற்கு முதல் இரு நாட்கள் ஏப்ரல் 21 மற்றும் 22 தேதிகளிலும், வாக்கு எண்ணிக்கை நாளான மே 4ம் தேதியும் டாஸ்மாக் கடைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. டாஸ்மாக் கடைகள் மட்டுமின்றி தனியார் பார்கள், நட்சத்திர விடுதிகளிலும் மதுபான விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நான்கு நாட்களிலும் விற்பனை மட்டுமின்றி, மதுபான தயாரிப்பு, மதுபானங்களை வாகனங்களில் கொண்டு செல்லுதல் என அனைத்து வகையான நடவடிக்கைகளுக்கும் தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது.

புதுவை, காரைக்காலிலும் விடுமுறை: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி புதுச்சேரி, காரைக்காலிலும் வரும் 21ம் தேதி முதல் 23ம் தேதிவரை 3 நாட்களுக்கு மதுபானக்கடைகள் மூட கலால்துறை உத்தரவிட்டுள்ளது.

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல் கடந்த 9ம் தேதி நடந்தது. இதையெபட்டி கடந்த 7ம் தேதி முதல் 9ம் தேதி வரை புதுச்சேரி, காரைக்காலில் மதுபானக் கடைகள் மூடப்பட்டிருந்தன. இந்நிலையில் தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வரும் 23ம் தேதி நடக்கிறது.

இதையடுத்து துணைநிலை ஆளுநர் உத்தரவுப்படி கலால்துறை துணை ஆணையர் மேத்யூ தாமஸ் பிறப்பித்துள்ள உத்தரவில், "தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் வரும் 23ம் தேதி நடைபெற உள்ளது. புதுச்சேரி யூனியன் பிரதேசம், தமிழ்நாடு மாநிலத்துடன் எளிதில் ஊடுருவக்கூடிய எல்லைகளைப் பகிர்ந்து கொள்கிறது. அண்டை மாநிலமான தமிழ்நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பராமரிப்பதில் தேர்தல் இயந்திரத்திற்குத் திறம்பட ஆதரவளிக்க வேண்டும்.

தேர்தல் செயல்முறையின் நேர்மையை நிலைநிறுத்த புதுச்சேரியின் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் "மதுவிலக்கு நாட்களை" அமல்படுத்துவது அவசியமாகியுள்ளது.

ஆகவே, புதுச்சேரி கலால் விதிகள், அதிகாரங்களைப் பயன்படுத்தி, புதுச்சேரியின் துணைநிலை ஆளுநர் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் உள்ள சாராயம், கள்ளு மற்றும் மதுபானம் வழங்கும் பார்கள் மற்றும் உணவகங்கள் உட்பட அனைத்து மதுபானக் கடைகளும் ஏப்ரல் 21ம் தேதி முதல் ஏப்ரல் 23 வரை மூட உத்தரவிட்டுள்ளார்," என்று தெரிவித்துள்ளார்.

# இந்தியத் தேர்தல் திருவிழா: சர்வதேச குழுவினர் பாராட்டு



புதுடெல்லி, ஏப்.14-

அசாம், கேரளா மற்றும் புதுச்சேரியில் கடந்த 9ம் தேதி சட்டப் பேரவை தேர்தல் நடை பெற்றது. இதை பார்வை யிடுவதற்காக 22 நாடு களைச் சேர்ந்த சர்வ தேச குழுவினர் 38 பேர் வந்திருந்தனர்.இவர்கள் அசாம், கேரளா மற்றும் புதுச்சேரியில் கடந்த 8 மற் றும் 9 தேதிகளில், தேர்தல் நடவடிக்கைகளை பார்வை யிட்டனர். தேர்தல் அதிகாரி கள், காவல் துறை அதி காரிகள், வாக்காளர்கள் என அனைத்து தரப்பினரை யும் சந்தித்து பேசினர். வாக்குச் சாவடிகளில் செய் யப்பட்டுள்ள வசதிகளை யும் அவர்கள் பார்வையிட் டனர்.இது குறித்து நமீபி யாவில் இருந்து வந் திருந்த பவுலஸ் ஷிக் வேதா கூறுகையில், "வாக் குச் சாவடிகள் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தன. அங்கு சக்கர நாற்காலி, குழந்தை பாதுகாப்பு வசதி கள் செய்யப்பட்டிருந் தது மிகவும் கவர்ந்தது" என்றார்.சியரா லியோனைச் சேர்ந்த அபுபக்கர் மகமூத் கூறுகையில், "இந்தியத் தேர்தலில் கண்ட மிகச் சிறந்த விஷயம் எலக்ட் ரானிக் ஓட்டுப் பதிவு இயந் திரம். இங்குக் கண்ட பல விஷயங்களை நாங்கள் எங்கள் நாட்டில் அமல் படுத்த முயற்சிப்போம்" என்றார்.

# "திமுக, அதிமுகவுக்கு மக்களை வாழ விடவேண்டும் என்ற எண்ணம் துளி கூட இல்லை" சீமான்




திண்டுக்கல், ஏப்.14-

"இந்த நாட்டையும், நாட்டு மக்களையும் வாழ விட வேண்டும் என்ற துளிகூட எண்ணம் இல்லாத கட்சிகள்தான் திமுக, அதிமுக" என நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் காஜா உசேன் அகமதுவை ஆதரித்து எரியோட்டில் அக்கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசியது: "இந்தியாவை யார் ஆள்வது என்ற போட்டி வரும்போது இந்த கட்சிகள் பாஜக மற்றும் காங்கிரஸோடு கூட்டணி வைத்துக் கொள்கின்றன.

தமிழ்நாட்டை யார் ஆள்வது என்ற போட்டி வரும்போது திமுக மற்றும் அதிமுக ஊழல் கட்சிகளோடு பாஜக மற்றும் காங்கிரஸ் கூட்டணி வைத்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டை அதிமுக மற்றும் திமுக ஆகிய இரு கட்சிகளும் 60 ஆண்டுகளாக மாறி மாறி ஆட்சியை செய்து கொண்டிருக்கின்றன. போட்டி போட்டுக் கொண்டு ஊழல் லஞ்சத்தை பெருக்குவதிலும், இயற்கை வளங்களை கொள்ளை அடிப்பதிலும், மக்களின் நலங்களை கெடுப்பதிலும் இந்த இரு பெரும் கட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு தமிழ்நாட்டில் ஆட்சியை நடத்தி வருகின்றன.

இந்த நாட்டையும் நாட்டு மக்களையும் வாழ விட வேண்டும் என்ற துளி கூட எண்ணம் இல்லாத கட்சிகள்தான் இவை. விவசாயிகள் இன்றும் போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். மீனவர்களுக்கு தொடர்ந்து பிரச்சினைகள் இருந்து கொண்டே இருக்கிறது.


கல்வியை கொடுப்பதை தவிர அரசுக்கு என்ன வேலை இருக்கிறது. ஏன் இந்த அரசு மாணவர்களுக்கு கல்வியை இலவசமாக வழங்கக் கூடாதா?.

கல்வி, மருத்துவம் மற்றும் தண்ணீர் இங்கு வியாபாரம் ஆக்கப்பட்டுள்ளது. மலையை வெட்டி எடுப்பதையும், மணலை கொள்ளையடிப்பதையும் மக்கள் வேடிக்கை பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நரி, ஆடுகளை பட்டியலில் அடைத்து வைத்து நான் வெற்றி பெற்றால் உங்கள் அனைவருக்கும் போர்வை தருவேன் என்று கூறி தேர்தலில் வெற்றி பெற்று முதல்வர் ஆனது. அதன் பிறகு சக நரிகளைக் கொண்டு அனைத்து ஆடுகளின் தோல்களை உரித்தது. அதற்கு ஆடுகள் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு, உங்களுக்கு போர்வை தரப் போறேன். அதற்காக உங்கள் தோலை உரிக்கிறோம் என்றது.

அனைத்து வளமும் உள்ள தமிழ்நாட்டில் பசி இருக்கிறது, வறுமை இருக்கிறது, பட்டினி இருக்கிறது. மதுக்கடைகளை மூடுவேன். இயற்கையான முறையில் தொழிற்சாலைகள் அமைத்து அரசுக்கு பல வகையில் வருமானங்கள் தேடிக் கொடுப்பேன். சாதி பார்க்காமல் சாதிக்க துடிக்கின்ற நல்ல மனிதனான வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் உசேனுக்கு விவசாயி சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்" என்றார் சீமான்.

# Namma Kasa: குப்பை பிரச்சினைக்கு தீர்வு காண உதவும் தளம் பெங்களூரு




பெங்களூரு, ஏப்.14-

பெங்களூரு நகர பகுதியில் குவியும் குப்பைகளை முறையாக அகற்றுவது சார்ந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் 'Namma Kasa' என்ற தளம் உதவுகிறது. இதுகுறித்து விரிவாக பார்க்கலாம்.

பெருநகரங்களில் வசிக்கும் மக்கள் அன்றாடம் தங்கள் வாழ்வில் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று முறையாக அகற்றப்படாத குப்பைகள். இதனால் நகரங்கள் பலருக்கு நரகமாகும். இந்நிலையில், இந்தியாவின் பெருநகரங்களில் ஒன்றான பெங்களூருவில் 'Namma Kasa' மூலம் புதிய முயற்சியை ஜோதிஷ் என்ற இளைஞர் தொடங்கியுள்ளார்.

இந்த தளம் மூலம் பெங்களூருவின் 243 வார்டுகளில் வசிக்கும் மக்கள் மட்டுமே இப்போதைக்கு தங்களது புகார்களை தெரிவிக்க முடியும். 30 விநாடிகளில் இதை செய்யலாம் என ஜோதிஷ் சொல்லியுள்ளார். இந்த தளத்தின் மூலம் பயனர்கள் தங்களது பெயர் உள்ளிட்ட தனிப்பட்ட விவரங்களை எதுவும் தெரிவிக்காமல், தங்கள் இடத்தில் அகற்றப்படாமல் குவிந்திருக்கும் குப்பையை அகற்றுவதற்கான புகாரை தெரிவிக்கலாம். இந்த தளம் கிரவுட்சோர்சிங் முறையில் இயங்குகிறது.

இதில் புகார் தெரிவிக்க விரும்புவோர் தங்களது லொகேஷனை இந்த தளம் அக்சஸ் செய்வதற்கான அனுமதியை தர வேண்டும். அதைத் தொடர்ந்து குவிந்திருக்கும் குப்பையை செல்போனில் படம் பிடித்து இந்த தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். அதன் பிறகு அந்த இடம் பெங்களூருவின் எந்த வார்டில் உள்ளது, குப்பையை அகற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பாளர்களான பெருநகர பெங்களூரு மாநகராட்சியின் அதிகாரிகள், அந்த வார்டை உள்ளடக்கி உள்ள சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் யார் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய புகார் தயாராகிறது.

அந்த புகார் சார்ந்த நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு அதற்கு தீர்வு காணப்பட்டுள்ளது குறித்தும் இதிலேயே தெரிவிக்கலாம். அதன் பின்னர் அது 'Resolved ரிப்போர்ட்' என மாற்றப்படுகிறது. இதை அப்படியே பெருநகர பெங்களூரு மாநகராட்சிக்கு நேரடியாகப் புகார் தரும் அம்சமும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

சமுதாயத்தின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த முயற்சியை மேற்கொண்டதாக ஜோதிஷ் தெரிவித்தார். இந்த தளத்தை பயன்படுத்த மிகவும் எளிதாக இருக்க வேண்டும் என்பதில் அவர் கவனமாக இருந்துள்ளார். இதை இலவசமாக பயன்படுத்தலாம் என்றும் கூறியுள்ளார். தினசரி பெங்களூரு நகரவாசி எதிர்கொள்ளும் விரக்திதான் இதை வடிவமைக்க காரணம் என அவர் கூறியுள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன்னர்தான் இந்த தளம் செயல்பாட்டுக்கு வந்தது. இதை மற்ற நகரங்களுக்கு விரிவு செய்யும் யோசனை இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.



# ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் தங்கியிருந்த லெபனான் கிராமங்களைத் தகர்த்தது இஸ்ரேல்

பெய்ரூட், ஏப்.14-

தெற்கு லெபனானில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் தங்கியிருந்த கிராமங்களை இஸ்ரேல் குண்டு வைத்து மொத்தமாக தகர்த்தது.

தெற்கு லெபனான் பகுதியில் உள்ள கிராமங்களில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் தங்கியிருந்தனர். இவர்கள் வடக்கு இஸ்ரேல் பகுதியில் அடிக்கடி ராக்கெட் குண்டு வீச்சில் ஈடுபட்டு வந்தனர். இதனால் கடந்த 2 வாரங்களாக லெபனான் மீது இஸ்ரேல் கடும் தாக்குதல் நடத்தி வந்தது.

காசாவின் ரஃபா, பெய்ட் ஹானன் ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்பு பகுதிகளை எல்லாம் மக்கள் மீண்டும் வசிக்காதபடி இஸ்ரேல் குண்டு வைத்து தகர்த்தது. தெற்கு லெபனான் எல்லைப் பகுதியில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் தங்கியிருந்த டேபெஹ், நகுரா மற்றும் டெயிர் செர்யான் ஆகிய கிராமங்களில் உள்ள அனைத்து வீடுகளையும் குண்டு வைத்து ரிமோட் கன்ட்ரோல் மூலம் இஸ்ரேல் ராணுவத்தினர் தகர்த்தனர்.

இந்த தாக்குதலின் செயற்கைக்கோள் வீடியோவையும் சமூக ஊடகத்தில் இஸ்ரேல் வெளியிட்டுள்ளது. லெபனான் எல்லையில் உள்ள பல கிராமங்களை இஸ்ரேல் தகர்த்துள்ளதாக லெபனான் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இதுவரை 2,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்நிலையில் லெபனானுடன் அமைதி ஒப்பந்தம் செய்ய விரும்புவதாகவும், ஆனால் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுடன் எந்த ஒப்பந்தமும் கிடையாது என்றும் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறியுள்ளார். தெற்கு லெபனானின் பல பகுதிகளை ஆக்கிரமிப்போம்.

அங்குள்ள லிதானி ஆறு வரை பாதுகாப்பு மண்டலம் உருவாக்குவோம்.அங்கிருந்து இடம் பெயர்ந்து சென்ற லெபனான் மக்கள் திரும்ப அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் இஸ்ரேல் கூறியுள்ளது. வடக்கு இஸ்ரேலில் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் வரை இந்த நிலை தொடரும் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

# பட்டாசு ஆலை விபத்து: ரூ.10 லட்சம் நிதியுதவி வழங்க நயினார் நாகேந்திரன் வலியுறுத்தல்



சாத்தூர், ஏப்.14-

"பட்டாசு ஆலை விபத்துகளில் பாதிக்கப்படுவோருக்கு ரூ.10 லட்சம் நிதி உதவி வழங்க வேண்டும். இதற்காக சட்டப்பேரவையில் நான் நிச்சயம் குரல் கொடுப்பேன். இதுபோன்ற விபத்துகளால் சாத்தூர் தொகுதியை சபிக்கப்பட்ட தொகுதியாகத் தான் நான் நினைக்கிறேன்," என்று தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வலியுறுத்தினார்.

வெம்பக்கோட்டை அருகே வெடி விபத்து ஏற்பட்ட பட்டாசு ஆலையை பாஜக வேட்பாளர் நயினார் நாகேந்திரன் பார்வையிட்டார். அப்போது அவர் அளித்த பேட்டியில், இது போன்ற ஒரு பட்டாசு விபத்து நடப்பதை, இப்போது தான் முதல் முறையாக பார்க்கிறேன். இந்தப் பகுதி வானம் பார்த்த பூமி. இப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் பட்டாசு தொழில் தான்.

அரசு அதிகாரிகளின் நெருக்கடி அதிகமாக உள்ள காரணத்தால்தான் தொழிலாளர்களை அவசரப்படுத்தி வேலை வாங்குகின்றனர். இதுபோன்ற சூழ்நிலையால் தான் விபத்து நடக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அரசு அதிகாரிகள் எடுக்கக்கூடிய தீவிர நடவடிக்கையும் இதற்கு ஒரு காரணம். அரசு அதிகாரிகள் பட்டாசு தொழிலாளர்களை துன்புறுத்துவதாகத்தான் நான் நினைக்கிறேன்.

இந்தப் பகுதியில் இத்தொழிலை விட்டால் மக்களுக்கு வேறு தொழில் கிடையாது. இதனால் மாநில அரசாங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, இதுபோன்ற தொந்தரவுகளை அதிகம் செய்யக்கூடாது என அறிவுறுத்த வேண்டும். நான் வெற்றி பெற்றதும் இது தொடர்பாக சட்டமன்றத்தில் பேசுவேன். இதுபோன்று எதிர்பாராத விதமாக வெடி விபத்து நடக்கும் போது காயம் அடைந்தவர்களை சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டி உள்ளது.

அவசரமாக செல்லும் நிலையில் சிவகாசியில் போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொள்ள வேண்டிய சூழ்நிலையும் உள்ளது. அதனால் வெம்பக்கோட்டை பகுதியிலேயே சிகிச்சைக்காக ஒரு மருத்துவமனையை கொண்டு வர நான் முயற்சிப்பேன், குரல் கொடுப்பேன். அரசு அதிகாரிகள் பட்டாசு ஆலை தொழிலாளர்களை நிம்மதியாக வேலை பார்க்க விட வேண்டும். ஆலை உரிமையாளர்களையோ தொழிலாளர்களையோ விரைவு படுத்தி, அவர்களை இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளக்கூடாது. அரசு இதில் தனி கவனம் செலுத்த வேண்டும்.

பட்டாசு விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.10 லட்சம் நிதி உதவி வழங்க வேண்டும். இதற்காக சட்டமன்றத்தில் நான் நிச்சயம் குரல் கொடுப்பேன். முதல்வரிடம் கூறி கண்டிப்பாக உரிய நிதி உதவியை பெற்றுக் கொடுப்பேன். இதுபோன்ற விபத்துகளால் சாத்தூர் தொகுதியை நான் சபிக்கப்பட்ட தொகுதியாகத் தான் நான் நினைக்கிறேன்.

நான் வந்த போது மிக மோசமாக இருந்ததை உணர்ந்தேன். குடிப்பதற்கு சுத்தமான குடிநீர் இல்லை. சாலை வசதி இல்லை. குக்கிராமங்களுக்கு பேருந்து வசதி இல்லை. இந்த நேரத்தில் அரசை நான் குற்றம் சாட்ட விரும்பவில்லை. வரும் காலத்தில் என்ன தேவையோ அதை செய்து கொடுப்பேன் என்று கூறினார்



■ புளியங்குடி, சிந்தாமணி செங்குந்தர் சமுதாயதிற்கு பாத்தியப்பட்ட அகஸ்தியர் கோவிலில் பங்குனி திருவிழாவை ஒட்டி ,பெண்கள் குழந்தைகள் கொளுத்தும் வெயிலில் கும்பிடு நமஸ்காரம் அங்க பிரதட்சணம் செய்து வழிபட்டனர். பங்குனி திருவிழாவை முன்னிட்டு, ஒவ்வொரு வருடமும் பத்து நாட்கள் திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. ஏப்ரல் 5ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கிய இந்தத் திருவிழாவானது 10நாட்கள் தொடர்ந்து சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. ஏப்ரல் இரண்டாம் தேதி முதல் ஒவ்வொரு நாளும் தொடர்ச்சியாக விநாயகர் பூஜை , கும்ப பூஜை, மூலமந்திர ஹோமம், சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்கார தீபாராதனை நடைபெற்று வருகிறது. மேலும் தினமும் இரவு கட்டளைதார்கள் மூலம் அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் சுவாமி வீதி உலாவானது நகரின் முக்கிய வீதிகளில் நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக எட்டாம் திருநாள் நிகழ்ச்சியான நேற்று இராமர் கோவிலிருந்து தீர்த்தம் எடுத்து வந்து பால்குடம் எடுக்கும் பக்தர்கள் வீதி உலா வந்தனர்.

# கூட்டணிக்குள் குஸ்தி ! கரையேறுமா ஐஜேகே ?

பெரம்பலூர், ஏப்.14-

தமிழக சட்டமன்ற தேர்தலில் ஐஜேகே கட்சியானது, தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கிறது. ஐஜேகேவுக்கு 2 தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2 தொகுதிகளிலும் அதிமுகவின் அதிகாரப்பூர்வ சின்னமான இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுகின்றது. ஐஜேகேவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 2 தொகுதிகளில், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள குன்னம் தொகுதியும் ஒன்று. குன்னம் சட்டமன்ற தொகுதியை பொறுத்தவரையில், வன்னியர் சமூகத்திற்கு அடுத்தபடியாக உடையார் சமூகமே மேலோங்கி இருக்கிறது. திமுகவிலோ போக்குவரத்துத்துறை அமைச்சரான சிவசங்கர் மீண்டும் போட்டியிடுகிறார்.



இந்திய ஜனநாயக கட்சியிலோ சரண்யா என்ற பெண்மணியை பாரிவேந்தர் களமிறக்கியுள்ளார் . ஐஜேகே தலைமையானது உள்ளூர் நிருபர்களை கண்டுகொள்ளாமலும், தொகுதி கூட்டணி கட்சியினரை கண்டுகொள்ளாமலும் இருந்து வருவது தான் ஐஜேகேவுக்கு பெரும் தலைவலியாக உள்ளது. தேர்தல் தேதி அறிவித்த போது, ஐஜேகே வுக்கு வெற்றி வாய்ப்பு இருந்தது. ஆனால் தற்போதோ தேர்தல்களில் அனுபவம் வாய்ந்த அரசியல்வாதி யாரையாவது தொகுதிக்கு ஒருங்கிணைப்பாளராக நியமிக்காமல், பாரிவேந்தரின் கல்வி நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களை நியமித்து தேர்தல் பணிகளை பார்க்க எஸ்ஆர்எம் குழுமம் நியமித்துள்ளதாகவும், அதனால் தான் கூட்டணி கட்சியினரை அரவணைத்து செல்ல முடியாமலும், உள்ளூர் பத்திரிகையாளர்களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்காமலும் திண்டாடி வருகிறது. சொந்த கட்சியினரே தேர்தல் தேதி அறிவிக்கும் பொழுது இருந்த உற்சாகம், கூட்டணி அலை , கட்சியினரின் தேர்தல் செயல்பாடுகள் தற்போது இல்லை .

பாரிவேந்தர் இந்த விஷயத்தில் நேரடியாக தலையிட்டு தனது கட்சிக்கான வேட்பாளரை வெற்றியடைய செய்திட வேண்டும் என சொந்த கட்சியினரே குமுறுகின்றனர்.

கூட்டணி கட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமலும் உள்ளூர் பத்திரிகையாளர்களை மதிக்காமலும் , நிலைமை இப்படியே போய் கொண்டிருந்தால் வெற்றிக்கு கேள்விகுறியே விடையாக கிடைக்கும் என்பது நிதர்சனமான உண்மை.



## உடுமலை பெரியகடை வீதி முதல் தளி ரோடு வரை அலைமோதிய மக்கள் கூட்டம்; இரட்டை இலைக்கு ஆதரவு திரட்டி சூறாவளிப் பயணம்

திருப்பூர் ஏப்.14-

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியின் அதிமுக வேட்பாளர் கே.ராதாகிருஷ்ணன், உடுமலை நகரப் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று இரட்டை இலை சின்னத்திற்குத் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன், தமிழகத்தில் உள்ள அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ. 10,000 நிதியுதவி வழங்கப்படும் என அவர் பொதுமக்களிடம் உறுதியளித்தார்.

மேலும், அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலவச வாஷிங் மெஷின் மற்றும் மாதந்தோறும் ரூ. 2,000 நிதியுதவி வழங்கப்படும் என்ற அம்மா அரசின் சாதனைகளையும், எடப்பாடியாரின் தேர்தல் வாக்குறுதிகளையும் எடுத்துரைத்தார். சதாசிவம் வீதி, அமராவதி நகர் வீதி, டி.எம்.எஸ் நகர், பெரியகடை வீதி மற்றும் தளி ரோடு பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு நேரில் சென்று ஆதரவு கோரினார்.

பங்கேற்ற முக்கிய நிர்வாகிகள்:

இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்வில் நகரக் கழகச் செயலாளர் அணிக்கம், நகரக் கழக அவைத்தலைவர் சாமி (எ) சிவராஜ், பாஜக நகர மண்டலத் தலைவர் பாலகுமார், முத்தரையர் சங்க நிர்வாகிகள் குப்புராஜ், மாமன்ற உறுப்பினர் சத்யா உள்ளிட்ட அதிமுக மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், வார்டு கழக நிர்வாகிகள் எனப் பெரும் திரளானோர் கலந்துகொண்டு இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.




■ மதுரையில் தேர்தல் பரப்புரைக்காக டெல்லியில் இருந்து விமான மூலம் வந்த மத்திய தொழில்துறை அமைச்சர் பியூஷ்கோயல், உதயநிதி ஸ்டாலினின்பேச்சு தமிழக கலாச்சாரத்தை புண்படுத்தியுள்ளது. தமிழக மக்கள் ஒரு போதும் உதயநிதியை முதல்வராக ஏற்க மாட்டார்கள் என்று கூறினார். எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, மதுரையின் எதிர்காலத்தை மாற்றியமைக்கும் என்றும், புரட்சித்தலைவி ஜெயலலிதா வழங்கிய சிறந்த ஆட்சியை மீண்டும் கொண்டு வரும் என்று அவர் தெரிவித்தார்.

## எட்டயபுரம் அருகே கோர விபத்து : தேசிய நெடுஞ் சாலையில் லாரி மீது கார் மோதியதில் 4 பேர் உயிரிழப்பு

தூத்துக்குடி, ஏப்.14-

எட்டயபுரம் அருகே தேசிய நெடுஞ் சாலையில் லாரி மீது கார் மோதிய விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர். சென்னையை சேர்ந்த பாஸ்கரன், வனிதா என்ற தம்பதியின் குடும்பத்தை சேர்ந்த 6 பேர் 2 நாட்களுக்கு முன்பு திருச்செந்தூர் கோவிலுக்கு வந்தனர். கோவிலில் தரிசனத்தை முடித்துவிட்டு இன்று மதியம் சென்னை புறப்பட்டனர். அப்போது எட்டயபுரம் பகுதியில் எம்.கோட்டூர் அருகே சாலை ஓரம் நிறுத்தப்பட்டிருந்த லாரி மீது, கார் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் சென்னை கொளத்தூரைச் சேர்ந்த பாஸ்கரன், வனிதா, பழனி, வசந்தி ஆகியோர் உயிரிழந்தனர். பலத்த காயமடைந்த சிறுவர், சிறுமி எட்டயபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பாக எட்டயபுரம் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். கோவில்பட்டி வட்டார போக்குவரத்து ஆய்வாளரும் சம்மந்தப்பட்ட இடத்தில் ஆய்வு செய்து விசாரணை நடத்தி வருகிறார். இந்த விபத்து அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000




■ தென்காசி ஐசிஐ அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், 100% வாக்குப்பதிவு வலியுறுத்தி சிலம்ப விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் சிலம்பம் மூலம் தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்வினை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர்.இ.ஆ.ப. துவக்கி வைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



## டீ மாஸ்டராக மாறிய தவெக வேட்பாளர்! தேநீர் வழங்கி அசத்தல் வாக்கு சேகரிப்பு

அலங்காநல்லூர். ஏப்.14-

தமிழக வெற்றிக் கழகத்தின் மதுரை மாநகர் வடக்கு மாவட்ட செயலாளர் விஜய்அன்பன் கல்லானை ஆலோசனையின் பேரில், புறநகர் மாவட்ட செயலாளர் விஷால்கிருஷ்ணா முன்னிலையில், மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள மேலச்சின்னணம்பட்டி கிராமத்தில், சோழவந்தான் தொகுதி தவெக வேட்பாளர் மூ.வீ.கருப்பையா பொதுமக்களிடம் விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

அப்போது தேநீர் கடைக்கு சென்ற அவர் தேநீர் கடை ஓனராகவே மாறி பொதுமக்களுக்கு தேநீர் போட்டுக் கொடுத்தார். பின்னர் கொண்டையம்பட்டி, சம்பகுளம், எல்லப்பட்டி, அய்யனக்கவுண்டன்பட்டி, தனிச்சியம் உள்ளிட்ட பகுதிகளில் வயல் வெளிப்பகுதிகளில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகளிடம் விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். அவருக்கு கட்சி நிர்வாகிகள் கைத்தறி ஆடை அணிவித்து வரவேற்பு கொடுத்தனர்.

இதில் அலங்காநல்லூர் மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, இணைச் செயலாளர் முத்து, அலங்காநல்லூர் ஒன்றிய செயலாளர் விஜய்ஹரிஷ், நகரச் செயலாளர்

தளபதிரஞ்சித், இணைச் செயலாளர் ராமநாதன், பாலமேடு நகர செயலாளர் புகழ், வடக்கு நிர்வாகிகள் தனசேகர், கார்த்தி, மகளிரணி சுஜிதா, காளீஸ்வரி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



■ போடிநாயக்கனூர் நகர பிரமலைக்கள்ளர் மத்திய சங்கம் மற்றும் இளைஞர் அணி அதை சார்ந்த தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்களை தமிழக முன்னாள் முதல்வர், போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் ஓ.பன்னீர்செல்வம் நேரில் சந்தித்து, அவர்களின் தேவைகள் மற்றும் குறைகளை கேட்டு அறிந்த பின் 2026 போடிநாயக்கனூர் சட்டமன்றத் தேர்தலில் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய தங்களது பேராதரவு தருமாறு கேட்டுக்கொண்டார்.

## "தவெக மகளிரை அச்சுறுத்தும் ஆளும் கட்சியினர்..." விஜய் குற்றச்சாட்டு

சென்னை, ஏப்.14-

"மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கும் சூழலை ஏற்படுத்த வேண்டும். தேர்தல் ஆணையம் தனது கண்காணிப்புப் பணிகளை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும்" என தவெக தலைவர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "கோவை மாவட்டம், பொள்ளாச்சி அருகே, சகோதரி ஒருவரது வீட்டின் சுவரில் அவரது அனுமதியின்றித் தங்களது கட்சி ஸ்டிக்கரைச் சிலர் ஒட்டியுள்ளனர். அதற்கு எதிர்ப்பு தெரிவித்த, கைக்குழந்தையுடன் உள்ள இன்னொரு சகோதரியையும் அவரது வீட்டில் இருந்தவர்களையும் சம்பந்தப்பட்டவர்கள் தாக்கியதாகவும் தகாத வார்த்தைகளால் பேசியதாகவும் சமூக வலைதளங்களில் காணொலி பரவி வருகிறது. மகளிர் மீதான இந்தத் தாக்குதல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

வீட்டு உரிமையாளரின் அனுமதியின்றி, வீட்டுச் சுவரில் ஸ்டிக்கர் ஒட்டக் கூடாது என்ற நிபந்தனை உள்ளது. அதை மீறியதோடு, தட்டிக் கேட்ட உரிமையாளரைத் தாக்கியுள்ளனர். இந்த அடாத செயலில் ஈடுபட்டவர்களை உடனடியாகக் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விசில் புரட்சியால் வெற்று விளம்பர மாடல் ஆட்சி அவ்வளவுதான், இனி கல்லாப் பெட்டியை நிரப்ப முடியாது என்கிற கோபத்தில் சிலர் இருக்கின்றனர்.

வாக்குப் பதிவுக்கு இன்னும் சில தினங்களே இருக்கும் நிலையில் பொதுமக்களை அவர்கள் அச்சுறுத்தி வருகின்றனர். வீட்டில் தனியாக இருக்கும் பெண்களை அவதூறாகப் பேசி, மிரட்டி வருகின்றனர். இத்தகைய அராஜகப் போக்கைக் காவல் துறை தடுத்து நிறுத்த வேண்டும்.

மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கும் சூழலை ஏற்படுத்த வேண்டும். தேர்தல் ஆணையம் தனது கண்காணிப்புப் பணிகளை இன்னும் தீவிரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000